## Eastern University, Sri Lanka,

## Faculty of Arts and Culture

## Second Year/ Second Semester Examination in Bachelor of Arts & Culture-2016/17

## (Specialization in Economics 2015/2016 Batch) (December 2019)

## ECS 2243 Labor Economics

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பகுதி 01 இலிருந்து எவையேனும் 02 வினாக்களுக்கும் பகுதி 02 இலிருந்து எவையேனும் 03 வினாக்களுக்குமாக மொத்தமாக 05 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

### பகுதி 01

அ. ஊழியத்தினுடைய சிறப்பியல்புகளை சுருக்கமாக விபரிக்குக.

(4 புள்ளிகள்)

ஆ. ஊழியச் சந்தையில் சமநிலைத் தொகை மற்றும் சமநிலை விலை எற்பவற்றில் ஏற்படும் மாற்றத்தை வரைபடம் மூலம் விளக்குக.

(4 புள்ளிகள்)

இ. ஊழியக் கேள்வி நெகிழ்ச்சி என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(4 புள்ளிகள்)

ஈ. தனியுரிமைச் சந்தையில் கூலியானது எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது என்பதை பொருத்தமான வரைபடம் மூலம் காட்டுக.

(8 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

அ. நவீன பழம் பொருளியல் மாதிரியினது ஊழிய நிரம்பல் தொடர்பான தீர்மானத்தை சுருக்கமான விளக்குக.

(5 புள்ளிகள்)

ஆ. குமார் தற்போது தனது தொழிலுக்கான கூலியாக மணித்தியாலத்திற்கு ரூபா. 1000 பெறுகின்றான். இக்கூலியில் ஒவ்வொரு நாளும் ஐந்து மணித்தியாலம் வேலை செய்ய தீர்மானித்துள்ளான். இத்தரவைக் கொண்டு ஓய்விற்கும் வருமானத்திற்கும் இடையேயான குமாரினுடைய சமநிலையினை வரவுசெலவுத் திட்ட வரையறை (Budget constraint) மற்றும் சமபயன் வளையி (Indifference Curve) என்பவற்றினூடாகக் காட்டுக.
(16 மணித்தியாலத்தை ஓய்விற்கும் உழைப்பிற்கும் பயன்படுத்துவதாக கொள்க.)

(8 புள்ளிகள்)

இ. மெய்கூலி மற்றும் ஒதுக்கீட்டுக் கூலி என்பவற்றை கொண்டு ஒரு ஊழியரது ஊழியம் மற்றும் ஓய்வெடுத்தல் தொடர்பான தீர்மானம் பற்றி குறிப்பிடுக.

(7 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

அ. ஊழியச் சந்தையில் கூலி வேறுபாட்டுக்கான கெடோனிக் கோட்பாடு (Hedonic theory) விளக்குவது யாது?

(4 புள்ளிகள்)

ஆ. கூலி மற்றும் விபத்து அபாயத்திற்கான (risk of injury) தெரிவு தொடர்பா ஊழியர்களும் தொழில் வழங்குனர்களும் எவ்வாறு இணைந்து கொள்கின்றார்க என்பதனை ஊழியர்களது சமபயன் வளையி (Indifference curve) மற்று தொழில் வளங்குனர்களது சமஇலாப வளையி (Isoprofit curve) மூலம் விளக்குக.

(08 புள்ளிகள்

இ. கூலி வேறுபாட்டில் பால் நிலை வேறுபாடானது செல்வாக்குச் செலுத்துகின்றத உமது விடையினை சமகால நடைமுறைகளுடன் விளக்குக.

(08 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளிகள்

பகுதி- 02

04. இ. ஊழிய நகர்விற்கான சாதக பாதக காரணிகளை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. ஊழியச் சந்தையில் காணப்படும் பொதுவான பிரச்சினைகளில் வேலையின்மையு ஒன்றாகும். வேலையின்மையின் வகைகளை குறிப்பிட்டு அவற்றிற்கா காரணங்களை சுருக்கமாக விபரிக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்

05. அ. தொழிற்சங்கம் மற்றும் நிருவாகம் என்பவற்றிற்கிடையே இடம்பெறும் கூட்டு பேரம் பேசல் செயற்பாடு பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. அண்மைக்காலங்களில் இலங்கையில் இடம்பெற்ற சில தொழிற்சங் நடவடிக்கைகளை குறிப்பிட்டு அவற்றின் சாதக பாதகங்களை விளக்குக.

(10 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளிகள்

06. அ. இலங்கையின் ஊழியச் சந்தையின் பிரதான குறைபாடாக ஊழிய கேள்வி மற்று நிரம்பலுக்கிடையே பொருத்தமின்மை குறிப்பிடப்படுகின்றது. இக்கூற்றினை ஏற்று கொள்கின்றீரா? விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. ஊழியச் சந்தையில் பெண்களின் பங்களிப்புப் பற்றி சுருக்கமாக ஆராய்க.

(10 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளிகள்

07. ”அதிக பாடசாலைப் படிப்பும் உயர் கல்வித் தரமும் கொண்டவர்கள் உய கூலியினைப் பெறுகின்றனர்” இக்கூற்றின் பொருத்தப்பாட்டை “மனித மூலத முதலீடு“ எனும் எண்ணக்கருவினூடாக பொருத்தமான வரைபடங்களை பயன்படுத் ஆராய்க.

(20 புள்ளிகள்